# வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்
## மாதிரிப் பரீட்சை - 5
## வரலாறு - I

தரம்:- 11 நேரம் :- 1 மணித்தியாலம்

### பகுதி I

எல்லாவினாக்களுக்கும் விடைதருக

1) நிகழ்காலமும் எதிர்காலமும் நிச்சயமாக இறந்த காலத்திலிருந்து கட்டியெழுப்பப்படுவதுடன் அதன் அடையாளங்களையும் காணமுடியும். அதனை மறந்து செயற்படுவது அத்திவாரமின்றி கட்டடமொன்று கட்டப்படுவதற்கு சமமாகும் எனக் கூறியவர்
   1. ஈஎச் கார்
   2. அரிஸ்ரோட்டில்
   3. ஜவஹர்லால்நேரு
   4. ஹொலிங்வூட்

2) புனிததந்ததாதுவின் வரலாற்றைக் கூறும் பாளிமொழியிலான நூல்
   1. ராஜதரங்கனி
   2. தடாவம்சம்
   3. போதிவம்சம்
   4. தலதாசிரித

3) துட்டகைமுனுவின் பத்துபடைத் தளபதிகள் பற்றி மகாவம்சம் குறிப்பிடும் விபரங்கள் உள்ளடங்கிய கல்வெட்டு
   1. பெரிமியன் குகைக் கல்வெட்டு
   2. கொடவாய தூண் கல்வெட்டு
   3. மிகுந்தலை கல்வெட்டு
   4. சங்கபாலவிகாரைக் கல்வெட்டு

4) மத்திய ஆசியாவிலிருந்து வருகை தந்த ஆரியர்கள் வட இந்தியாவில் முதன் முதலில் அமைத்துக் கொண்ட குடியேற்றமும், வருகை தந்த கணவாயும் கொண்ட விடைத்தொகுதி
   1. குரு, ஹைபர் கணவாய்
   2. வஜ்ஜி, மக்ரான் கணவாய்
   3. மல்ல, போலன் கணவாய்
   4. பஞ்சாப், ஹைபர் கணவாய்

5) இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களால் பயன்படுத்தப்பட்ட சிறிய அடுப்புக்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடம்
   1. கித்துல்கல
   2. பட்டதொம்ப
   3. பாகியன்கல
   4. இராணவனஎல்ல

6) இலங்கையில் பௌத்த மதத்தில் முதன் முறையாகப் பிளவு ஏற்படுவதற்கு காரண கர்த்தாவான பௌத்த துறவி
   1. வாரியப்பொல சுமங்கலதேரர்
   2. குப்பிக்கல மகா திஸ்ஸதேரர்
   3. தர்மலோகதேரர்
   4. தர்மகீர்த்திதேரர்

7) அலகபாத் தூண் கல்வெட்டினையும் அலகபாத் பிரஹஸ்தியையும் அமைப்பதற்கு ஆதரவு அளித்த மன்னர்கள் முறையே
   1. அசோகன், சந்திரகுப்த மௌரியன்
   2. அசோகன், சந்திரகுப்தன்
   3. சந்திரகுப்தன், அசோகன்
   4. சந்திரகுப்த மௌரியன், முதலாம் சந்திரகுப்தன்

8) இந்தியாவிற்குள் வந்த ஆரியர்கள் தென் இந்தியாவிற்குப் புலம்பெயரும் போது கடந்து சென்ற மலைத்தொடர்
   1. விந்திய மலைத்தொடர்
   2. இமாலய மலைத்தொடர்
   3. இந்துக்குஸ் மலைத்தொடர்
   4. சற்புத்ரா மலைத்தொடர்

9) பண்டைய இலங்கையில் நடைபெற்ற ஆக்கிரமிப்புக்கள் நிரல் I இலும் அக்காலத்தில் ஆட்சி செய்த மன்னர்கள் நிரல் II இலும் காணப்படுகின்றன. அவற்றைத் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் விடைத்தொகுதி

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1) சேனன் குத்திகன் | A - 4ம் மகிந்தன் |
| 2) ஏழு திராவிடர் | B - பராக்கிரமபாண்டியன் |
| 3) ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன் | C - 5ம் மகிந்தன் |
| 4) கலிங்கமாகன் | D - வலகம்பா |
| 5) 3ம் கிருஷ்ணன் | E - 1ம் சேனன் |
| | F - சூரதீஸ்ஸன் |

1. ABCDE 2. FADEB 3. DEFAB 4. FDEAB

10) யாழ்ப்பாண இராச்சியத்தில் தமிழர்கள் சிங்களவர்களிடையே நல்லுறவை ஏற்படுத்தி மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றிருந்த மன்னன்

1. வரோதயன் 2. ஜெயவீரன் 3. குணபூசணன் 4. குணவீரன்

11) பொலன்னறுவைக்கால கட்டட நிர்மாணங்களில் செல்வாக்குச் செலுத்திய கலைமரபு

1. மௌரியகாலமரபு
2. குப்தர்காலமரபு
3. பல்லவர்காலமரபு
4. சோழல்காலமரபு

12) கி. பி. 1526 இல் மொகலாய ஆட்சியை இந்தியாவில் ஸ்தாபிப்பதற்கு பிரதான காரணமாக அமைந்த விடயம்

1. ஜெசியா வரி நீக்கம்
2. மன்சத்தார்முறை அறிமுகம்
3 பனிபட் போர்
4. கோரிமுகம்மதுவின் ஆக்கிரமிப்பு

13) மயூர சந்தேசய, நிசர சந்தேசய போன்ற நூல்கள் எழுதப்பட்ட காலம்

1. கோட்டை காலம்
2. கம்பளைக் காலம்
3. குருநாகல் காலம்
4. தம்பதெனியாக் காலம்

14) பின்வரும் கால்வாய்களை அமைத்த மன்னர்களைத் தெரிவு செய்க.
அங்கமெடில்ல, எலகர, ஜயகங்கை, மினிப்பே

1. 1ம் விஜயபாகு, வசபன், தாதுசேனன், 1ம் அக்போ
2. 1ம் விஜயபாகு, தாதுசேனன், 1ம் அக்போ, வசபன்
3. 1ம் பராக்கிரமபாகு, வசபன், தாதுசேனன், 1ம் அக்போ
4. 1ம் பராக்கிரமபாகு, தாதுசேனன், வசபன், 1ம் அக்போ

15) அரச குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பநிலை, சோதர்மன் போன்ற பிரதேசத் தலைவர்களின் எழுச்சி ஆகிய காரணங்களால் வீழ்ச்சியடைந்த அரசு

1. மகதப் பேரரசு
2. மௌரியப் பேரரசு
3. குஷாணப் பேரரசு
4. குப்தப் பேரரசு

16) யோதவாவி எனப்படும் இராட்சதக்குளம் அமைந்துள்ள மாவட்டம்

1. முல்லைத்தீவு
2. திருகோணமலை
3. வவுனியா
4. மன்னார்

17) மொகலாய மன்னர் ஜஹாங்கீர் ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் ஆங்கிலேயர் கோட்டை அமைத்த இடம்

1. சூரத் 2. பஞ்சாப் 3. ஆக்ரா 4. காஷ்மீர்

18)

i. கோரிமுகம்மதுவின் அடிமையாக இருந்து விடுதலை பெற்றவர்
ii. அலாவுதீன் கல்ஜியின் படைத்தளபதியாக விளங்கியவர்
iii. அலாவதீன் பஹம்ஷா என்பவனிடம் பாமினி இராச்சியத்தை ஒப்படைத்தவன்
போன்ற கூற்றுக்களுடன் தொடர்புபட்டவர்

1. கோரிமுகம்மது, பிரோஷ்கல்ஜி, முகம்மதுஷா
2. குதுபுதீன் ஐபெக், அக்பர், அகமதுஷா
3. குதுபுதீன் ஐபெக், மலிக்கபூர், இஸ்லாமியில்முக
4. இல்துமிஸ், மலிக்கபூர், இஸ்லாமியில்முக

19) நிரல் I இல் காணப்படும் விடயங்களுக்குப் பொருத்தமானவர்கள் நிரல் II இல் காணப்படுகிறார்கள். இவற்றைத் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடைத்தொகுதி

| நிரல் I | நிரல் II |
| --- | --- |
| 1) நானேஅரசன் | A - ஜோசப்மசினி |
| 2) இரத்தமும் இரும்பும் | B - கரிபால்டி |
| 3) இளம் இத்தாலி | C - 14ம் லூயி |
| 4) செஞ்சடைவீரர் | D - கவூன் கவூர் |
| 5) வில்லர் பிரஸ்ஸா ஒப்பந்தம் | E - ஓட்டோமன் பிஸ்மார்க் |

1. CEDAB 2. CEADB 3. CEABD 4. CEABD

20) நிரல் I இல் இலங்கையின் இடம்பெயர்ந்த இராசதானிகளின் பெயர்களும் நிரல் II இல் அவற்றின் புராதன பெயர்களும் தரப்பட்டுள்ளன. இரண்டினையும் தொடர்புபடுத்தும் போதுகிடைக்கும் சரியான விடைத்தொகுதியை தெரிவுசெய்க

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1) தம்பதெனியா | A - சுபவர்பத |
| 2) யாப்பகூவா | B - அதுகல்புர |
| 3) குருநாகல் | C - கங்காசிறிபுர |
| 4) கம்பளை | D - ஜப்புத்தோணி |

1. ABCD 2. BDEA 3. DABC 4. BDCA

21) செய்முறை விஞ்ஞானத்தின் தந்தை என சிறப்பித்துக் கூறப்படும் விஞ்ஞானி
1. ஹெப்லர் 2. ஐசாக் நியூட்டன்
3. நிக்கலஸ் கொப்பனிக்கஸ் 4. கலிலியோகலிலி

22) இலங்கை தேசிய சங்கத்தின் தலைவர்
1. சேர் பொன் அருணாசலம் 2. சேர் பொன் இராமநாதன்
3. C. W. W.கன்னங்கரா 4. A. E.குணசிங்க

23) பிரித்தானிய காலத்தில் இலங்கையின் கல்வி முன்னேற்றத்திற்காக கொழும்பை மையமாகக் கொண்டு இயங்கிய இயக்கம்
1. இங்கிலாந்து மிஷனரி சங்கம் 2. பப்டிஸ் மிஷனரி இயக்கம்
3. அமெரிக்க மிஷனரி இயக்கம் 4. வெஸ்லியன் மெதடிஸ்த இயக்கம்

24) பின்வரும் சோடிகளில் மிகவும் பொருத்தமான சோடிகள்

A - பாமியன் புத்தர் சிலை - ஆப்கானிஸ்தான்
B - போரோ புதூர்சிலை - மியான்மார்
C - ஆங்கோர்வாட் - கம்போடியா
D - ஸ்வேதகோன் - சீனா

1. AB 2. AC 3. AD 4. BD

25) 1921 இல் பல்கலைக்கழக உருவாக்கத்திற்கு காரணமான ஆளுநர்
1. ஆர் எம் மோர்கன் 2. மெக்கன்ஸி
3. சாமஸ் 4. ஆதர்கோடன்

26) இறக்காமக்குளம், நுவரவாவி போன்றவற்றைப் புனரமைப்புச் செய்த பிரித்தானிய ஆளுநர்கள்
1. ஹென்றிவோட், மக்கலம் 2. வில்லியம் கிரகரி, ஆதர்கோடன்
3. வெஸ்ட்றிஜ்வே, மக்கலம் 4. ஹென்றிவோட், கென்றி ஆத்தர் பிளேக்

27) பல பயிர் யுகக் காலத்தில் குயினைன் மருந்து தயாரிப்பதற்கு உதவிய பயிர்
1. மஞ்சள் 2. இஞ்சி 3. சிங்கோனா 4. கோப்பி

28) 16ம் லூயிமன்னனின் ஆலோசகராக இருந்த பழமையான சிந்தனைவாதி
1. மொலிபா 2. மிராவோ 3. நெக்கர் 4. டர்கேரி

29) பின்வரும் விடயங்களில் கைத்தொழில் புரட்சியால் ஏற்பட்ட அரசியல் விளைவாகச் கொள்ளக் கூடியது

A. முதலாளி, தொழிலாளி வர்க்கங்கள் தோற்றம் பெற்றமை
B. தனியார் வர்த்தக நடவடிக்கைகள் விரிவடைந்தமை
C. வர்த்தக நிறுவனங்கள் தோற்றம் பெற்றமை
D. குடியேற்ற நாடுகளைப் பெறுவதில் உள்ள போட்டிகள்
E. சமவுடமைவாதம், தாராண்மைவாதம் பேராண்மைவாதம் போன்றவை தோற்றம் பெற்றமை

1. ADE 2. BCE 3. ABC 4. ABD

30) அத்திலாக்திக் சமுத்திரத்தினூடாக மேற்குத் திசையில் பயணித்து மத்திய தென்னமரிக்காவின் பல பிரதேசங்களை கண்டுபிடித்த நாட்டவர்
1. போர்த்துக்கேயர்    2. ஒல்லாந்தர்
3. பிரித்தானியர்    4. ஸ்பானியர்

தரப்பட்டுள்ள விடயங்களில் இருந்து 31ம் 32ம் வினாக்களுக்கு விடையளிக்குக
A. வரையறுக்கப்பட்டுள்ள வாக்குரிமை
B. முதன் முறையாக உத்தியோக சார்பற்றவர் அதிகரிப்பு
C. நிர்வாகக் குழுமுறை தோற்றம் பெற்றமை
D. இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம்
E. சர்வசன வாக்குரிமை

31) மேற்கூறப்பட்டுள்ள விடயங்களுள் டொனமூர் யாப்பின் விடயங்களைக் கொண்ட விடைத்தொகுதி
1. AB    2. CE    3. DC    4. CA

32) AB இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்குப் பொருத்தமான யாப்புக்கள்
1. கோல்புறுக், மனிங்    2. கோல்புறுக், சோல்பரி
3. குறுமக்கலம், சோல்பரி    4. குறுமக்கலம், மனிங்

33) இரண்டாம் சுதந்திரப் போராட்டம் இடம் பெற்ற இடங்கள்
1. கண்டி, ஊவா, வெல்லச    2. குருநாகல், தம்புள்ள, மாத்தளை
3. மாத்தளை, கண்டி, வாரியப்பொல    4. வாரியப்பொல, ஊவா, கண்டி

34) 1796 ம் ஆண்டு வரி அறவீடு செய்வதற்காக பிரித்தானியரால் வரவழைக்கப்பட்ட அலுவலர்
1. முகாந்திரம்    2. முதலியார்    3. அவுமில்தார்    4. பிரதானி

35) ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மலையக நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட நிரந்தர வதிவிடப் பிரதிநிதி
1. ஜோன் டொயிலி    2. றொபட்நொக்ஸ்
3. றொபட் பிறவுண்றிக்    4. ஜோன் பைபஸ்

36) இலங்கையில் முதன்முதலாக கோப்பித் தோட்டத்தை ஆரம்பித்தவர்
1. பாண்ஸ் தேசாபதி    2. வெஸ்ட்றிஜ்வே
3. ஜோர்ஜ்பேர்ட்    4. ஹெர்கியூலின் றொபின்சன்

37) பாடசாலையில் மதிய உணவு வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்தவர்
1. கோல்புறுக்    2. மோர்கன்    3. டொனமூர்    4. C. W. W.கன்னங்கரா

38) பிரம்மஞான சங்கம் என்னும் பௌத்த அமைப்பினைத் தோற்றுவித்தவர்
1. கிக்கடுவசுமங்கலதேரர்    2. அநாகரிகதர்மபால
3. குணானந்ததேரர்    4. ஹென்றிஸ்டீஸ் ஒல்கொட்

39) முஸ்லீம் நேசன், ஞானதீபம் போன்ற சஞ்சிகைகள் உருவாக்கியவர்
1. டி.பி ஜாயா    2. அநாகரிகதர்மபால
3. ஹென்றிஸ்டீஸ் ஒல்கொட்    4. அறிஞர் சித்திலெப்பை

40) உருவெலகம குடியேற்றம் அமைக்கப்பட்ட நதிக்கரையோரம்
1. மல்வத்துஓயா    2. கலாஓயா
3. வளவகங்கை    4. கிருந்திநதி

# வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## மாதிரிப் பரீட்சை - 5

## வரலாறு - II

தரம்:- 11 நேரம் :- 3 மணித்தியாலம்

* ✲ பகுதி I ல் முதலாம் வினா கட்டாயமானது
* ✲ பகுதி II ல் இருந்து மூன்றுவினாக்களும் பகுதி III ல் இருந்து இரு வினாக்களையும் தெரிவு செய்தல் வேண்டும்
* ✲ எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக

### பகுதி I

01.

அ. பகுதி (i) ல் தரப்பட்டுள்ளஎல்லாவரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் பகுதி (ii) ல் தரப்பட்டுள்ளஎல்லாவரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ளஉலகப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

i.

| | | | |
|---|---|---|---|
| கனகராயன் ஆறு | நெடுந்தீவு | தப்போவாவி | கங்காசிறிபுர |
| ஆனையிறவு | மகாதித்த | பராக்கிரமபுர | இலங்காபுரம் |
| சேனநாயக்கசமுத்திரம் | ஆளிசரகால்வாய் | | |

ii.

| | | |
|---|---|---|
| சற்புத்திரமலை | கிருஷ்ணாநதி | அலெக்சாந்திரியா |
| மட்ரிச் | தாய்வான் | மொசாம்பிக் கால்வாய் |
| மியன்மார் | ஜெனோவா | |

ஆ.

I. கீழே A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடையவற்றை முறையே எழுதுக.

A. கலைஞர்களுக்கு ஆதரவு தந்த லோறன்ஸ் டி மெட்சி குடும்பம் வாழ்ந்த இத்தாலிய நகரம்?

B. கி. பி. 1411 இல் யுங் - லோ பெயருடைய சீனாவின் பேரசினால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட சேனாதிபதியின் பெயர் என்ன?

C. “தம்பியா அட்டுவா கற்றபதய” என்னும் நூலை எழுதிய மன்னன்?

D. பௌத்தத்தின் வரலாற்றுடன் முக்கியத்துவம் பெறும் மகாமேகவனப் பூங்காவை நிறுவியவன்?

II. அருகே காணப்படும் படத்தினை அவதானித்து விடைதருக.



1. படத்தில் தரப்பட்ட கலைப் படைப்பினைப் பெயரிடுக.
2. இக்கலைப் படைப்பிற்கு உரிய இராசதானி.
3. இக்கலைப் படைப்பினை வடிவமைத்த மன்னன்.
4. இக்கலைப் படைப்பின் சிறப்பம்சம்.

III. அருகே காணப்படும் படத்தினை அவதானித்து விடைதருக.



1. படத்தில் காணப்படும் தலைவரின் பெயர்.
2. மேற்படி தலைவர் சமூக, பொருளாதாரக் கொள்கைக்காகப் போராடிய நாடு.
3. மேற்படி தலைவரது பிரபலமான கூற்று ஒன்றினைத் தருக.
4. இவரால் ஆரம்பிம்பிக்கப்பட்ட அரசியல் இயக்கத்தினைப் பெயரிடுக.

## பகுதி II

02.

I. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகால பின்வரும் விடயங்கள் காணப்பட்ட இடங்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து முறையே எழுதுக.

A. இறந்தவர்களுக்கான மரணச்சடங்கு சம்பிரதாயங்கள் தொடர்பாக கூறும் கல்வெட்டு

B. துறைமுக வரி அறவிடப்பட்டமை

C. வர்த்தக நகரங்கள் மற்றும் கைத்தொழில்களின் இயல்புகள்

(பாகியன்கல, பதுளைத்தூண் கல்வெட்டு, கொடவாயதூண் கல்வெட்டு, பெரியமியன் குளம் கல்வெட்டு) (3 புள்ளி)

II. பின்வரும் குடியேற்றங்களை அமைத்தவர்களைக் குறிப்பிடுக.

1) தம்பபன்னி
2) உபதிஸ்ஸகம
3) உஜ்ஜேனிக
4) அநுராதகம (4 புள்ளி)

III. இலங்கையின் கலாசார மலர்ச்சியை ஏற்படுத்துவதில் தேவநம்பியதீசன் காலம் முக்கியம் வாய்ந்ததாக இருந்த விதத்தை இரு உதாரணங்கள் தந்து விபரிக்க. (5 புள்ளி)

IV. பிற்காலத்தில் ஆரியர்கள் நீர்ப்பாசனத் திட்டங்களை ஆரம்பித்தமைக்கான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

03.

I. பின்வரும் குளங்களை அமைத்த மன்னர்களை குறிப்பிடுக.

A. அபயவாவி
B. மகாகண தரவாவி
C. திஸ்ஸவாவி (3 புள்ளி)

II. பின்வரும் கூற்றுக்களுடன் தொடர்புடைய மன்னர்களைக் குறிப்பிடுக.

1) இலம்பகர்ண அரச பரம்பரையை ஆரம்பித்த அரசன்
2) மகாவிகாரைக்கு எதிராகச் செயற்பட்ட அரசன்
3) தனது தந்தையைக் கொன்ற அரசன்
4) பனாகடுவ செப்புத் தகட்டைச் செய்வித்த மன்னன் (4 புள்ளி)

III. நீர்வள நாகரிகம் நிலவிய காலத்தில் மத்திய ஆட்சியாளனாகிய அரசனிடமிருந்து மக்கள் எதிர்பார்த்த சேவையை இரு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (5 புள்ளி)

IV. நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சிக்கு செல்வாக்குச் செலுத்திய காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

04. "பொலநறுவை இராசதானியின் வீழ்ச்சியின் பின் சிங்கள இராசதானி தென்மேற்கு நோக்கி இடம்பெயர்ந்தது"

I. பின்வரும் மன்னர்களால் தலைநகராக்கப்பட்ட இராசதானிகளைக் குறிப்பிடுக.

1) 3ம் விஜயபாகு
2) 2ம் புவனேகபாகு
3) 4ம் புவனேகபாகு (3 புள்ளி)

II. 2ம் பராக்கிரமபாகு மன்னனின் அரசியல், சமய நடவடிக்கைகள் இவ்விரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

III. கோட்டையை ஆட்சி செய்த அரசர்களுள் 6ம் பராக்கிரமபாகு சிறந்த மன்னராக கொள்ளப்பட்டமைக்கான காரணங்கள் இரண்டினைக் கூறிவிளக்குக. (5 புள்ளி)

IV. தென்மேற்கு இராசதானி காலத்தில் இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குக. (6 புள்ளி)

05.

I. இலங்கையில் கத்தோலிக்க மதத்தை பரப்புவதற்கு துணைபுரிந்த போர்த்துக்கேய மிஷனரிக் குழுக்கள் மூன்று தருக. (3 புள்ளி)

II. கோட்டை இராச்சியத்தில் போர்த்துக்கேயர் நுழைவதற்கு வாய்ப்பாக அமைந்த காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

III. சீதாவாக்கை இராச்சியத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள் இரண்டைக் கூறிவிளக்குக. (5 புள்ளி)

IV. ஒல்லாந்தர் ஆட்சியினால் ஏற்பட்ட விளைவுகள் மூன்றைக் கூறிவிளக்குக. (6 புள்ளி)

06.

I. மௌரியப் பேரரசு மன்னர்கள் மூவரைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

II. இலங்கை, இந்தியா, தவிர ஆசிய நாடுகளில் பௌத்த சமயம் பரவிய நாடுகள் நான்கினைக் குறிப்பிடுக (4 புள்ளி)

III. புராதன இலங்கை வெளிநாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகள் மேற்கொண்டு இருந்தமைக்கான சான்றாதாரங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

IV. இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் சிறப்புற அமைய சாதகமாக அமைந்த காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

## பகுதி III

07.

I. மகதத்தை ஆட்சிசெய்த வம்சங்கள் மூன்று தருக. (3 புள்ளி)

II. அசோக சக்கரவர்த்தியின் ஆட்சிக் கால சிறப்புக்கள் 2 தருக. (4 புள்ளி)

III. குப்தர் கால கல்வி நிலையின் சிறப்புக்களை விளக்குக. (5 புள்ளி)

IV. குப்தப் பேரரசுகளின் காலம் பொற்காலம் என அழைப்பதற்கான காரணம் மூன்று குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

08.

I. இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்ட மூன்று முக்கிய துறைகளையும் குறிப்பிடுக. (3 புள்ளி)

II. பின்வரும் A, B, C, D எனக் கூறப்பட்டுள்ள கண்டுபிடிப்புக்களுடன் தொடர்புடையவர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.

A. நீராவி இயந்திரம்

B. பாதுகாப்பான விளக்கு

C. மோட்டார் வண்டி

D. தையல் இயந்திரம்

(ஹம்ரிடேவி, எலியன்ஸ்கோர்வே, ரெம்ளர், ஜேம்ஸ்வார்ட், ஆபிரகாம் டார்பி, பெசமர்)

(4 புள்ளி)

III. இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய பொருளாதார ரீதியிலான காரணிகள் இரண்டினைக் கூறி விளக்குக. (5 புள்ளி)

IV. கைத்தொழில் புரட்சியினால் ஏற்பட்ட சாதக, பாதக விளைவுகள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

09

I. டில்லி சுல்தானிய இராச்சியத்தில் பின்வரும் வம்சங்களில் ஆட்சிசெய்த மன்னர் ஒருவரைக் குறிப்பிடுக.

1) அடிமை வம்சம்

2) கல்ஜி வம்சம்

3) துக்ளக் வம்சம் (3 புள்ளி)

II. இந்தியாவை ஆண்ட (16 நூற்றாண்டில்) மொகலாயப் பேரரசைச் சார்ந்த மன்னர்கள் நால்வரைக் குறிப்பிடுக (4 புள்ளி)

III. பஹமன் இராச்சியத்தின் வீழ்ச்சிக்கான காரணிகள் இரண்டினைக் கூறி விளக்குக. (5 புள்ளி)

IV. இந்தியக் கலை வளர்ச்சியில் மொகலாய செல்வாக்கின் மூலம் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினைக் கூறி விளக்குக. (6 புள்ளி)

10

I. இருபதாம் நூற்றாண்டில் ஆசியாவில் எழுச்சிபெற்ற மூன்று நாடுகளைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

II. இந்தியாவின் தேசிய விடுதலைக்காக உழைத்த மிதவாதத் தலைவர்கள் இருவரையும் தீவிரவாதத் தலைவர்கள் இருவரையும் தருக. (4 புள்ளி)

III. இந்தியர்களிடையே தேசிய உணர்வுக்கு வழிகோலிய காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

IV. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் உயிர்ப்பான தலைவரான மகாத்மா காந்தியின் பங்களிப்பை மூன்று விடயங்களைக் கொண்டு விளக்குக. (6 புள்ளி)